<u>செய்தி வெளியீடு எண்.356</u> <u>நாள்.19.5.2008</u>

காஞ்சிபுரம், திருவள்ளூர் மாவட்டங்களில் ஏரிகளில் ஆக்கிரமிப்பு செய்து குடியிருப்பவர்களை அகற்றக் கூடாது என்று போராட்டம் நடத்துவது குறித்தும், அந்த ஏரிகளில் குடியிருக்கும் மக்களின் பிரச்சினை குறித்தும் இன்று மாலையில் மாண்புமிகு முதல் அமைச்சர் கலைஞர் அவர்கள் அமைச்சர்களுடனும், துறைகளின் அதிகாரிகளுடனும் கலந்தாலோசித்தார். இந்தக் கூட்டத்தில் அமைச்சர்கள் ஆர்க்காடு வீராசாமி, துரைமுருகன், பொன்முடி, ஐ. பெரியசாமி ஆகியோரும் உள்துறை செயலாளர், நிதித்துறை செயலாளர், வருவாய்த் துறை செயலாளர், பொதுப்பணித் துறை செயலாளர் ஆகியோரும் கலந்து கொண்டார்கள்.

தற்போது ஏரிகளில் ஆக்கிரமிப்பு செய்து குடியிருப்பவர்களை அகற்ற வேண்டுமென்று நீதிமன்றம் உத்தரவிட்டு – அதன் அடிப்படையில் தான் அதிகாரிகள் ஆக்கிரமிப்பாளர்களை அகற்ற முயற்சிக்கின்றார்கள். அப்படி அகற்ற முயற்சிக்கின்ற நேரத்தில் அங்கே வாழ்கின்ற மக்கள் கிளர்ச்சி செய்கிறார்கள். போராட்டம் நடத்துகிறார்கள். நீதி மன்றத்தின் உத்தரவு இருப்பதைத் தெரிந்தோ, தெரியாமலோ போராட்டம் நடத்தும் மக்களுக்கு சில அரசியல் கட்சிகளும் துணை போகின்ற நிலைமை ஏற்பட்டிருக்கின்றது.

இந்தச் சூழ்நிலையில் அந்த ஏரிகளை ஆக்கிரமிப்பு செய்து வாழ்கின்ற ஏழை மக்களுக்கு உதவி செய்வதற்காகவும் – அதே நேரத்தில் நீதி மன்றத்தின் உத்தரவை நிறைவேற்றுகின்ற முறையிலும் – அதிகாரிகள் எப்படி நடந்து கொள்வது என்பதைப் பற்றி கலந்தாலோசித்து முடிவெடுக்க அரசின் சார்பில் வருவாய்த் துறை அமைச்சர் தலைமையில் குழு ஒன்று உடனடியாக அமைக்கப்படவுள்ளது. அந்தக் குழுவினர் ஆக்கிரமிப்பு செய்துள்ள மக்களின் பிரதிநிதிகளை சந்தித்து பிரச்சினையை சுமூகமாகத் தீர்ப்பதற்கு ஆவன செய்வார்கள். அது வரையில் எந்தக் கிளர்ச்சியிலும் ஈடுபடாமல் அங்கு வாழும் மக்கள் அமைதி காக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

*****

வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9.